# சடங்கு நிகழ்த்துகையும் புராண உருவாக்கமும்: பள்ளிக்குடியிருப்புக் கொம்புமுறி நிகழ்த்துகையை முன்வைத்துச் சில விவாதங்கள்

வெற்றிவேல் ஜெயகலா

***முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம், திண்டுக்கல், தமிழ்நாடு.***

***ஆய்வுச் சுருக்கம்*** - *இலங்கையில் தமிழ், சிங்களப் பகுதிகளில் பத்தினி / கண்ணகி வழிபாட்டுடன் இணைந்ததாகக் காணப்படுகின்ற ஒரு சடங்குசார் நிகழ்வே கொம்புமுறி நிகழ்த்துகை. இதனைச் சிங்களப் பகுதிகளில் 'அங்கெலிய' என அழைக்கின்றனர். இந்நிகழ்த்துகையின் தோற்றம் குறித்துத் திட்டவட்டமாகக் கூறமுடியாத நிலையே உள்ளது. தற்போது இந்நிகழ்த்துகை சிங்களப் பகுதிகளில் வழக்கொழிந்து போனநிலையில், தமிழர் பகுதிகளில், குறிப்பாகக் கிழக்கிலங்கையில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. முன்னர், கிழக்கிலங்கையில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டு இருந்தாலும் தற்போது அம்பாறை மாவட்டத்தில் பாணமை, தம்பிலுவில், மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலை, சித்தாண்டி, திருகோணமலை மாவட்டத்தில் பள்ளிக்குடியிருப்பு ஆகிய இடங்களில் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வருகின்றது. பாணமை தவிர ஏனைய இடங்களில் யுத்தம் மற்றும் சமூகக் காரணங்களால் இடைநிறுத்தப்பட்டிருந்த இந்நிகழ்த்துகை, அண்மைக் காலத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ச்சியாக நிகழ்த்தப் பட்டு வருகின்றது. இவ்விடங்களில் நிகழ்த்தப்படும் நிகழ்த்துகைக்கான அடிப்படை, ஒன்றாக உள்ள போதிலும் நிகழ்த்தப்படும் முறைமை, புராணக்கதை போன்றவற்றில் சில வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன. கொம்புமுறி நிகழ்வு வெறுமனே ஒரு சடங்குசார் நிகழ்த்துகை மட்டுமல்ல. அது குறியீட்டுத்தன்மையானது. நிகழ்த்துகின்ற மக்களின் உளவெளிப்பாட்டினைப் பிரதிபலிப்பது. அவர்களிடம் காணப்படுகின்ற முரண்பாடுகள், உறவுநிலைகள், சமூக, அரசியல் நிலைமைகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கான கருவியாக இது அமைகின்றது. இதனாலேயே இடத்துக்கிடம் தோற்றக்கதைகளும், நிகழ்த்துகைகளும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இப்பின்னணியில் நோக்குகையில், இந்நிகழ்த்துகை பற்றிய தோற்றக்கதைகள், பொதுவாக, கோவலன் - கண்ணகி / பத்தினி – பாலங்காவுடன் தொடர்புடையதாக இருக்க, திருகோணமலை - பள்ளிக்குடியிருப்பில் மட்டும் சிவன் – பார்வதியுடன் இணைத்துக்*

கூறப்படுவது கவனத்துக்குரியது. நீண்ட காலமாகக் கண்ணகி / பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடையதாக இருந்த கொம்புமுறி நிகழ்த்துகை, எவ்வாறு சிவன் - பார்வதி சம்பந்தப்பட்ட ஒன்றாக மாற்றமடைந்தது? என்ற அடிப்படைக் கேள்விக்கான விடையினை இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

**திறவுச்சொற்கள் -** அங்கெலிய, பார்வதி, கண்ணகி, மேல்நிலையாக்கம், நாட்டார்மரபு

இலங்கையில் தமிழ், சிங்களப் பகுதிகளில் பத்தினி / கண்ணகி வழிபாட்டுடன் இணைந்ததாகக் காணப்படுகின்ற ஒரு சடங்குசார் நிகழ்வே கொம்புமுறி நிகழ்த்துகை. சிங்களப் பகுதிகளில் 'அங்கெலிய'' என அழைக்கப்படும் இந்நிகழ்த்துகையின் தோற்றம் குறித்துத் திட்டவட்டமாகக் கூறமுடியாத நிலையே உள்ளது. தற்போது இந்நிகழ்த்துகை சிங்களப் பகுதிகளில் வழக்கொழிந்து போனநிலையில், தமிழர் பகுதிகளில், குறிப்பாகக் கிழக்கிலங்கையில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. முன்னர், கிழக்கிலங்கையில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டு இருந்தாலும் தற்போது அம்பாறை மாவட்டத்தில் பாணமை, தம்பிலுவில், மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலை, சித்தாண்டி, திருகோணமலை மாவட்டத்தில் பள்ளிக்குடியிருப்பு ஆகிய இடங்களில் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இந்நிகழ்த்துகை, பாணமை தவிர ஏனைய இடங்களில் யுத்தம் மற்றும் சமூகக் காரணங்களால் இடைநிறுத்தப்பட்டிருந்து, அண்மைக் காலத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இவ்விடங்களில் நிகழ்த்தப்படும் நிகழ்த்துகைக்கான அடிப்படை, ஒன்றாக உள்ள போதிலும் நிகழ்த்தப்படும் முறைமை, புராணக்கதை போன்றவற்றில் சில வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன.

பொதுவாகக் கொம்புமுறி நிகழ்த்துகையின் தோற்றம் பற்றிக் கூறுமிடத்து, பாண்டிய மன்னனுடன் வழக்குரைத்து மதுரையை எரியூட்டிய கண்ணகி கோபம் சிறிதும் தணியாதவளாக இடைச்சேரியை அடைந்த போது, அங்குள்ள இடையர்குலப் பெண்கள் நெய், பால், தயிர் கொண்டு கண்ணகிக்குத் திருமுழுக்காட்டி அவளின் கோபத்தைத் தணிவித்தார்கள் என்றும், இதன்போது இடையர்குலச் சிறுவர்களும் அவளின் கோபம் தணிந்து உளங்குளிருமாறு சில விளையாட்டுக்களை நிகழ்த்தினர் என்றும், அவற்றுள் கொம்பு விளையாட்டும், வசந்தனாடலும் குறிப்பிடத் தக்கவை என்றும் வி.சீ.கந்தையா குறிப்பிடுகின்றார் (2002: 177). மேலும், கொழுகொம்பு, கொம்புத்தட்டுக்

கொம்பு, கூடாரக் கொம்பு, ஏடகக் கொம்பு, தண்ணீர்க் கொம்பு என ஐந்து வகையான கொம்புகள் பயன்படுத்தப்படுகின்றமை பற்றியும், அவை நிகழ்த்தப்படும் முறைகள் குறித்தும் விவரித்துள்ளார் (மேலது. 179 – 190). அதேவேளை, வந்தாறுமூலை, பாணமை ஆகிய இடங்களில் இவற்றில் இருந்து சற்று வேறுபட்ட நிகழ்த்துகை நடைமுறைகள் உள்ள போதிலும் அவை கவனத்தில் கொள்ளப்படவில்லை. ஆனால் கொம்புமுறி குறித்த பெரும்பாலான பதிவுகள் வி.சி.கந்தையாவின் எழுத்துக்களை அடியொட்டியே இருப்பதால், இது பற்றிய அவதானங்கள் ஒற்றைத்தன்மையானவையாகவே காணப்படுகின்றன.

இதே வேளையில் சிங்கள மக்களிடம் காணப்படுகின்ற அங்கெலிய குறித்த விரிவான ஆய்வினை மேற்கொண்ட கணநாத் ஒபயசேகர பாணமை, பியன்வளை ஆகிய இடங்களில் உள்ள தோற்றக் கதைகள் பத்தினி பாலங்காவுக்கு இடையில் ஏற்படுகின்ற முரண்பாட்டினைக் கூறுவதாக உள்ளமையை ஆராய்ந்துள்ளார் (1983: 468 – 470). மேலும், இந்நிகழ்த்துகை சிங்கள மக்களிடம் உள்ள சமூக, உளவியல் சிக்கலைப் பேசுவதாகக் கூறுகின்ற அதேவேளையில், அங்கெலிய பற்றிச் சொல்லப்படுகின்ற புராணக் கதை இந் நிகழ்த்துகையினை விளக்குவதற்காக உருவாக்கப்பட்டதே எனக் கூறுகின்றார். அதாவது புராணத்துக்கு முன்னரே நிகழ்த்துகை இருந்துள்ளது எனவும், அவ்வாறு இருந்த சடங்கிற்கு விளக்கம் கூறுவதாகப் புராணத்தை உருவாக்கியுள்ளனர் எனவும் அவ்வாறு உருவாக்கிய புராணம் அம்மக்களின் உளவியலை வெளிப்படுத்துவதாக உள்ளதாகவும் கூறுகின்றார் (மேலது. 469). எனவே, கொம்புமுறி நிகழ்வு வெறுமனே ஒரு சடங்குசார் நிகழ்த்துகை மட்டுமல்ல. அது குறியீட்டுத்தன்மை யானது. நிகழ்த்துகின்ற மக்களின் உளவெளிப்பாட்டினைப் பிரதிபலிப்பது. இது அவர்களிடம் காணப்படுகின்ற முரண்பாடுகள், உறவு நிலைகள், சமூக, அரசியல் நிலைமைகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கான கருவியாக அமைகின்றது. இதனாலேயே இடத்துக்கிடம் தோற்றக் கதைகளும், நிகழ்த்துகைகளும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இப்பின்னணியில் நோக்குகையில், இந்நிகழ்த்துகை பற்றிய தோற்றக்கதைகள், பொதுவாக, கோவலன் - கண்ணகி /பத்தினி – பாலங்காவுடன் தொடர்புடையதாக இருக்க, திருகோணமலை - பள்ளிக்குடியிருப்பில் மட்டும் சிவன் – பார்வதியுடன் இணைத்துக் கூறப்படுவது கவனத்துக்குரியது.

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராபர்ட் நோக்ஸின் இலங்கை குறித்த அறிக்கை கொம்புமுறி நிகழ்த்துகையை மக்களிடம்

காணப்படுகின்ற ஒரு விளையாட்டு *(sport)* எனக் குறிப்பிடுவதுடன் அது பத்தினியை முன்வைத்து நிகழ்த்தப்படுவதாகப் பதிவு செய்துள்ளது. இந்நிலையில், கண்ணகி / பத்தினி வழிபாட்டுடன் மட்டுமே தொடர்புடையதாக இருந்த கொம்புமுறி நிகழ்த்துகை எவ்வாறு சிவன் – பார்வதியுடன் இணைந்த ஒன்றாக மாற்றமடைந்தது? என்ற அடிப்படைக் கேள்விக்கான விடையினை இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது. இது 2021 நவம்பர், டிசம்பர் காலங்களில் மேற்கொண்ட கள ஆய்வின்போது பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகின்றது. இக்கட்டுரையின் முதல் பகுதி கொம்புமுறிச் சடங்கினை விவரிப்பதாகவும் இரண்டாவது பகுதி நாட்டார் வழக்காற்றியல் பார்வையில் அதனைப் பகுப்பாய்வு செய்வதாகவும் அமைகின்றது.

**பள்ளிக்குடியிருப்பில் கொம்புமுறி நிகழ்த்துகை**

பள்ளிக்குடியிருப்புக் கிராமம் கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்ப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ளது. மூதூரில் இருந்து கட்டைமறிச்சான் வழியாகவும், தோப்பூர் வழியாகவும் இவ்வூரை அடையலாம். சுற்றிலும் நெல் வயல்களால் சூழப்பட்ட பகுதியாகவும் சிறு சிறு காடுகள், குளங்கள் கொண்ட பகுதியாகவும் இவ்வூர் காணப்படுகின்றது. திமிலர் சமூகத்தினர் அதிகமாக வாழுகின்ற இவ்வூரில் விவசாயமும் கால்நடை வளர்ப்பும் அடிப்படை வாழ்வாதாரங்களாக உள்ளன. இதனால் தமது வாழ்வாதாரத்துக்கான மழையினையும், குளிர்ச்சியினையும் வேண்டி ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை செய்யப்படுகின்ற வழிபாட்டு நிகழ்வாகக் கொம்புமுறி நிகழ்த்துகையினை நிகழ்த்தி வருகின்றனர். இந்நிகழ்வு தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும் என்பதற்காக 2010 காலப்பகுதியில் 'சிவசக்தியம்மன் கொம்புமுறி விளையாட்டுச் சங்கம்'' என ஓர் அமைப்பினை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பள்ளிக்குடியிருப்புக் கலைமகள் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள பொதுவெளியே கொம்புமுறி நிகழ்த்துகைக்கான நிகழ்விடம். இந்நிகழ்த்துகையினை பள்ளிக்குடியிருப்பு மக்கள் "சடங்கு" என்றே அழைக்கின்றனர்.

ஆரம்ப காலங்களில் பள்ளிக்குடியிருப்பைத் தவிர, மல்லிகைத்தீவிலும் இச்சடங்கு நிகழ்த்தப்பட்டுள்ளது. இங்கும் பெரும்பான்மைச் சமூகமாகத் திமிலர்களே வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. பின்னர் மல்லிகைத்தீவில் நின்று போக, பள்ளிக்குடியிருப்பில் மட்டும் தொடர்ந்து வந்துள்ளது. இச்சடங்கு 1948,

*1965, 1971, 1976 ஆகிய வருடங்களில் நிகழ்த்தப்பட்டு உள்ளதை அவற்றில் கலந்து கொண்டவர்களின் வாயிலாக அறியமுடிகின்றது. 1977 இல் நிகழ்ந்த இனக்கலவரத்தினால் தடைப்பட்டிருந்த இந்நிகழ்த்துகை மேற்குறித்த விளையாட்டுச் சங்கத்தினரால் 2010 இல் மீண்டும் நிகழ்த்தப்பட்டு, அதன் தொடர்ச்சியாக, ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு 2015 இல் நடத்தப்பெற்றுள்ளது. ஆனால், கொரோனா பெருந்தொற்றினால் 2020 இல் மீண்டும் தடைப்பட்டுள்ளது. ஆயினும், மக்கள் பொருத்தமான சூழலுக்காகக் காத்திருக்கின்றனர்.*

*வடசேரி (கோவலன் பகுதியினர்), தென்சேரி (கண்ணகி பகுதியினர்) என இரு பிரிவினர் இணைந்து இரு கொம்புகளைக் கொழுவி இழுக்கும் நிகழ்வாக இந்நிகழ்த்துகை இடம்பெறுவதும் அதில் இறுதியில் தென்சேரி வெல்ல வேண்டும்; அதாவது கண்ணகி / பத்தினி வெல்ல வேண்டும் என்பதும் இந்நிகழ்வின் அடிப்படை நோக்கம். ஏனெனில், அம்மன் வென்றால்தான் மழை பொழிந்து விளைச்சல் பெருகும் என்பதும் ஊரில் நோய் பிணிகள் இல்லாதிருக்கும் என்பதும் மக்களின் நம்பிக்கைகள். ஆனால், பள்ளிக்குடியிருப்பில் சிவன் - பார்வதி ஆகியோருக்கிடையில் நடைபெறும் மோதலில் இறுதியில் சிவன் வெற்றியடைவதாகவே நிகழ்த்துகையினை நிறைவு செய்கின்றனர். இதனை நியாயப்படுத்துவதாக இந்நிகழ்த்துகையின் தோற்றம் குறித்த புராணக் கதையினை முன்வைக்கின்றனர். அக்கதை பின்வருமாறு:*

*தேவலோகத்தில் சிவனுக்கும் பார்வதிக்குமிடையே தங்களில் யார் பெரியவர் என்ற வாக்குவாதம் ஏற்படுகின்றது. இதன்போது தம்மில் யார் பெரியவர் என்பதைக் கண்டுகொள்ள, தங்களுக்கிடையிலான போட்டியைப் பூவுலகில் நடத்தத் தீர்மானிக்கின்றனர். இதற்காகக் கொம்புமுறி விளையாட்டினைத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த விளையாட்டில் யார் வெற்றியடைகின்றாரோ அவரே பெரியவர் என்பதாக முடிவெடுக்கின்றனர். விளையாட்டு ஆரம்பித்த அன்றே பார்வதிக்கு மாதவிலக்கு வந்துவிடுகின்றது. மாதவிலக்கான பெண்களை யாரும் பார்க்கக் கூடாது. இதனால் ஐந்து நாட்கள் பார்வதி மறைவாக இருக்கின்றார். இதன்போது சிவன் பார்வதியிடம், 'நீ தோற்று விட்டாய்; அதனால்தான் உனக்கு மாதவிடாய் வந்து முடியாமல் போயுள்ளது'' எனவும் 'நீ வேண்டுமானால் உன்னுடைய இரு பிள்ளைகளையும் உனது பக்கத்தில் சேர்த்துக்கொள். நான் தனியாக நிற்கின்றேன். விளையாடுவோம். ஆணா? பெண்ணா? எனப் பார்ப்போம்' எனவும்*

கூறுகின்றார். அதற்குப் பார்வதி, 'என்னுடைய சக்தி எல்லாவற்றையும் திரட்டி முருகனுக்குக் கொடுத்ததனால்தான் இப்போது நான் பலமிழந்து நிற்கின்றேன், அதனால் நான் முருகனை அழைத்து வைத்துக் கொள்கின்றேன்'' என்கிறார். அப்போது இதற்கு நடுவர் யார் என்கின்ற கேள்வி எழவும் பார்வதி தனது சகோதரரான விஸ்ணுவை வைத்துக் கொள்கின்றேன் என்கின்றார். சிவன் பிள்ளையாரை வைத்துக் கொள்ளுவதாகக் கூறுகின்றார். விஸ்ணுவும், பிள்ளையாரும் நடுவர்களாக இருக்க விளையாட்டு நடைபெறுகின்றது. அதில் சிவன் வெற்றி அடைவதாக இருந்த போதிலும் பார்வதி கோபமடைவார் என்பதனால், சிவன் அவருக்கு விட்டுக்கொடுக்க, பார்வதி வெற்றி அடைகின்றார். பார்வதியை எல்லோரும் கொண்டாடுகின்றனர். அப்போது பார்வதி, 'நான்தான் பெரிதென இருக்கக் கூடாது, ஆணுக்குப் பெண் அடிபணிய வேண்டும். இது எனக்கு இப்போதுதான் விளங்குகின்றது. என்னுடைய கணவர் தோல்வியடைந்த பின்னர் நான் வெற்றியடைந்து என்ன பயன்?' எனக்கூறி மீண்டும் கொம்பினைக் கொழுவுமாறு கூறுகின்றார். மீண்டும் கொம்பிழுத்தல் நடைபெறுகின்றது. இதில் சிவன் வெற்றியடைகின்றார்.

இக்கதையின் நிகழ்த்துதலாகவே பள்ளிக்குடியிருப்பில் கொம்புமுறி நிகழ்த்துகை குறிப்பிடப்படுகின்றது. இதனடிப்படையில், கொம்பு முறித்தலுக்கான நாளினைத் தீர்மானித்தல், கொம்பு நேர்தல், அம்மன் அழைத்துவரப்படல், கொம்பு முறித்தல் என்ற ஒழுங்கில் நிகழ்த்துகை தொடருகின்றது.

### கொம்பு முறித்தலுக்கான நாளினைத் தீர்மானித்தல்

பள்ளிக்குடியிருப்பில் கொம்புமுறி நிகழ்த்துகை ஆனி மாதத்தில் வருகின்ற ஒரு திங்களில் ஆரம்பித்து மறு திங்களில் முடிவடைவதாக அல்லது வெள்ளிக்கிழமை ஆரம்பித்து அடுத்து வருகின்ற வெள்ளிக்கிழமை முடிவடைவதாக எட்டு நாட்கள் நிகழ்த்தப்படுகின்றது. இதற்கெனத் தனியாக ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு அதில் கொம்பு முறித்தலுக்கான நாளினைத் தீர்மானிக்கின்றனர். இதன்போது கொம்புத்தலைவர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். கொம்புத்தலைவராக இருப்பவர் கொம்புமுறி விளையாட்டுப் பற்றிய பூரணமான அறிவுடையவராகவும் தனது அணியை வழிநடத்தும் ஆளுமைப்பண்பு உள்ளவராகவும் இருக்கவேண்டும். மேலும், கொம்புத்தலைவர் தாய்க்குத் தலைமகனாக இருக்க வேண்டும். அத்துடன் அவரின் தாய் தமது மாமன் மகனைத் திருமணம் செய்திருக்க வேண்டும் என்ற நியதியும் உள்ளது.

*தாய்வழியிலேயே சேரி / வாரம் பார்க்கப்படுவதனால் இத்தகைய இறுக்கமான நடைமுறையைக் கையாளுகின்றனர். குறித்த நியதிக்குட்பட்ட ஒருவரைத் தெரிவுசெய்வது கடினம் என்பதனால் சில வேளைகளில் ஒருவரே பல தடவைகள் கொம்புத்தலைவராக இருப்பதும் உண்டு. பொதுவாக தந்தை வழியிலேயே சேரி / வாரம் பார்க்கப்படுகின்ற போதிலும் பள்ளிக்குடியிருப்பு, தம்பிலுவில் ஆகிய இடங்களில் தாய் வழியில் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

**கொம்பு நேர்தல்**

*இந்நிகழ்த்துகை பள்ளிக்குடியிருப்பில் நடைபெறுகின்ற போதிலும் மூதூர்ப் பிரதேசத்தின் முக்கிய தெய்வமாக விளங்கும் நீலாப்பளை பத்தினியம்மனை (தாயம்மன்) முன்வைத்தே இதற்கான சடங்குகள் அனைத்தும் நிகழ்த்தப் பெறுகின்றன. அத்தோடு நீலாப்பளைப் பத்தினியம்மன் கோயில் பூசகரே அச்சடங்குகளைச் செய்பவராகவும் உள்ளார். கொம்பு முறித்தலுக்கான நாள் தீர்மானிக்கப்பட்டதும் கொம்புமுறி நிகழ்வு ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாகக் ''கொம்பு நேர்தல்'' எனும் நிகழ்வு இடம்பெறுகின்றது. அதாவது ஒரு திங்களில் நிகழ்வு ஆரம்பமாகின்றது எனில் அதற்கு முன்னர் வருகின்ற திங்களில் ''கொம்பு நேர்தல்'' நடைபெறும். அன்று மதிய வேளையின் பின்னர் பூசகருடன் பள்ளிக்குடியிருப்பில் உள்ள பெரியவர்கள், கொம்புத்தலைவர்கள் போன்றோர் தாயம்மன் கோயிலான நீலாப்பளைப் பத்தினியம்மன் கோயிலுக்குச் சென்று தீர்த்தம் எடுத்து வருகின்றனர். பின்னர், அத்தீர்த்தத்தினைக் கொண்டு ஊர்காவல் பண்ணும் நிகழ்வு இடம்பெறுகின்றது.*

*இந்நிகழ்வு முடிவடைந்த பின்னர் தீர்த்தம் எடுத்துவரும்போது தாயம்மன் கோயிலில் இருந்து எடுத்து வரப்பட்ட இரு பெரிய கொம்புகளுக்கும் பள்ளிக்குடியிருப்புக்கு அண்மையில் உள்ள மோராண்டகுளம் பத்தினியம்மன் கோயிலில் வைத்து அபிசேகமும் வழிபாடும் நடைபெறுகின்றன. இதன்பின்னர் அக்கோயிலில் உள்ள நீர் நிறைந்த பெரிய கிடாரம் ஒன்றினுள் அக்கொம்புகள் இடப்படுகின்றன. கொம்புகளுக்கு அபிசேகம் செய்யும்போது கொம்புத் தலைவர்களுக்கும் அபிசேகம் செய்யப்படுகின்றது. கொம்புகள் நீர் நிறைந்த கிடாரத்தினுள் இடப்பட்டதும் நிலத்தில் விழாதவாறு பறிக்கப்பட்ட இரு தேங்காய்கள் கோயிலின் உள்ளே வடக்குப் பார்த்தவாறாக ஒன்றும், தெற்குப் பார்த்தவாறாக ஒன்றுமாக நேர்ந்து கட்டப்படுகின்றன.*

இதனைத் தொடர்ந்து, நிகழ்த்துகை நடைபெறும் இடத்தில் கொம்பு மால்கள் கட்டப்பட்டு கொம்புமுறி நிகழ்வுக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கொம்பு மால்கள் அமைக்கப்படும் வேளையில் சுமார் ஆறடி உயரமுடைய இரு ஏடகங்கள் அல்லது தேர்களும் கட்டப்படுகின்றன. இரு சேரியாரும் போட்டியாக இதனை அலங்காரம் செய்கின்றனர். சிவனையும் அம்மனையும் வைத்து வழிபாடு செய்வதற்காக இவை செய்யப்படுகின்றன. இவ்வாறான ஆயத்த வேலைகள் முடிவடைந்ததும் கொம்புமுறி நிகழ்வு ஆரம்பமாகின்றது. அதாவது ஒரு திங்களன்று கொம்பு நேர்தல் நிகழ்வு இடம்பெற்றிருந்தால் அடுத்து வரும் திங்களன்று கொம்புமுறி நிகழ்வு , சடங்கு ஆரம்பமாகின்றது.

**அம்மன் அழைத்து வரப்படல்**

கொம்புமுறி நிகழ்வின் ஆரம்ப நாளன்று மாலையில் நீலாப்பளையில் இருந்து அம்மனை அழைத்துவரல் நிகழ்வு நடைபெறுகின்றது. பூசகருடன் கொம்புத் தலைவர்கள், பெரியவர்கள் உள்ளிட்டோர் சென்று அம்மனை அழைத்து வருகின்றனர். பள்ளிக்குடியிருப்பில் இருந்து குறித்த ஒரு நபர் தெரிவு செய்யப்பட்டு அவரிடம் அம்மன் கொடுக்கப்பட்டு வெள்ளைத் துணியால் அவரை மறைத்தவாறு அழைத்து வருகின்றனர். அம்மன் பள்ளிக்குடியிருப்பின் எல்லையை அடைந்ததும் வயதான பெண்கள் குரவைக் கூத்தாடி அம்மனை வரவேற்க, ஏனைய மக்கள் நிறைகுடம் வைத்து அம்மனை வரவேற்கின்றனர். பின்னர், பள்ளிக்குடியிருப்பிலுள்ள சித்தி விநாயகர் ஆலயத்துக்கும், அங்கிருந்து மோராண்டகுளம் பத்தினியம்மன் ஆலயத்துக்கும் அம்மன் கொண்டு செல்லப்படுகின்றார். அங்கு வழிபாடுகள் இடம்பெற்ற பின்னர் நேர்ந்து கட்டப்பட்ட தேங்காய்களை அவிழ்த்து, அத்தேங்காய்களுடன் நீர் நிறைந்த அண்டாவில் போடப்பட்டிருந்த கொம்புகள், பூசைப்பொருட்கள் என்பனவற்றுடன் கொம்புச் சந்தியில் உள்ள நிகழ்வு நடைபெறும் இடத்தை வந்தடைகின்றனர்.

அங்கு வெள்ளை விரிக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்ற பின்னர் தேங்காய் உடைக்கும் நிகழ்வு இடம்பெறுகின்றது. அதன் பின்னர், கொண்டு வரப்பட்ட கொம்புகள் இரண்டும் தத்தம் சேரிக்குரிய மால்களில், அதாவது, வடசேரிக் கொம்பு வடசேரிக்குரிய கொம்பு மாலிலும் தென்சேரிக் கொம்பு தென்சேரிக்குரிய கொம்பு மாலிலும் வைக்கப்படுகின்றன. இக்கொம்புகளுக்கு நிகழ்வு முடிவடையும் வரை காலையும் மாலையும் பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

தேங்காய் உடைக்கப்பட்டதன் பின்னர் நெல் குற்றிக் கும்பம் வைத்து அக்கினி வளர்க்கப்பட்டு அம்மனுக்கும் சிவனுக்கும் பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. முதல் நான்கு நாட்களும் அம்மனும் சிவனும் வெள்ளை ஆடைகளாலேயே அலங்கரிக்கப்படுகின்றனர். இந்நாட்களில் அம்மன் தீட்டுக்குரியவராக இருப்பதனால் அவ்வாறு அலங்கரிக்கப்படுவதாகக் கூறுகின்றனர். ஆனால் தீட்டில்லாத சிவனும் வெள்ளையாடையினாலேயே அலங்கரிக்கப்படுகின்றமை கவனிக்கத்தக்கது.

பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து அம்மன், சிவன் இருவரினதும் தேர்கள் ஊருக்குள் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படுகின்றன. வயதான பெண்கள் மட்டுமே அதாவது மாதவிலக்கு நின்ற பெண்களே இதன் போது அம்மனைப் பார்க்க முடியும். ஏனையவர்கள் வீட்டினுள்ளேயே இருப்பர். இரு தேர்களும் ஊரினைச் சுற்றி நிகழ்விடத்தை வந்தடைந்ததும் கொம்பு முறிக்கும் நிகழ்வு ஆரம்பமாகின்றது. இதில் வெற்றியடைந்த பகுதியினர் ஆரவாரத்தோடு தமது கொம்புடன் ஊருக்குள் சென்று தோல்வியடைந்தவர்களின் வீடுகளின் முன்னால் நின்று வசை பாடுகின்றனர். வீட்டிலுள்ளவர்களோ மஞ்சள் தண்ணீரை வசை பாடுபவர்கள் மீது ஊற்றிக் கலைக்கின்றனர். வசைபாடும் நிகழ்வு முடிவடைந்து அவர்கள் நிகழ்விடத்தை வந்தடைந்ததும் அன்றைய நிகழ்வுகள் முடிவடைந்ததாகக் கொள்ளப் படுகின்றது. மறுநாள் மாலையில் மீண்டும் நிகழ்வு ஆரம்பமாகின்றது. இவ்விதமாக நான்கு நாட்கள் நடைபெற்ற பின்னர் ஐந்தாவது நாள் மாலையில் அம்மனுக்கும் சிவனுக்கும் அபிசேகம் நடைபெறுகின்றது. இதனைத் தொடர்ந்து அம்மனும் சிவனும் வண்ண ஆடைகளால் அலங்கரிக்கப்படுகின்றனர். அம்மனுக்குத் தீட்டு முடிவடைந்ததன் அறிகுறியாக இவ்வாறு செய்யப்படுகின்றது. தீட்டு முடிவடைந்த பின்னர் அம்மன் மீண்டும் கொம்பிழுக்கத் தயாராகின்றார்.

இதன் போது புராணத்தில் சொல்லப்படுவது போன்று அம்மன் தன் மகனை அழைத்துக் கொள்வதற்காகத் தாயம்மன் கோயிலுக்குச் செல்லும் நிகழ்வு நடைபெறுகின்றது. ஆறாம்நாள் காலையில் இரு தேர்களும் தாயம்மன் கோயிலை நோக்கிச் செல்லுகின்றன. இதன்போது சிவனுடைய தேரை விடவும் மிக விரைவாகவும் முன்னோக்கியும் அம்மனுடைய தேர் செல்லுகின்றது. அம்மன் தான் தோற்றுவிட்ட கோபத்தில் இருப்பதால் அவ்வாறு செல்வதாகக் கூறுகின்றனர். இவ்வேளையில் பெண்கள் யாரும் வெளியில் வரமாட்டார்கள். பறை

மேளச் சத்தம் கேட்டதும் பெண்கள் தத்தம் வீடுகளினுள்ளே சென்று விடுகின்றனர். சில வயதான பெண்கள் மட்டும் வெளியில் நிற்கின்றனர். தாயம்மன் கோயிலுக்குச் சென்றதும் அங்கு பாணக்கம் வைத்து அம்மனின் கோபம், உக்கிரம் தணிக்கப்பட்டு முருகனை அழைத்துத் தாயுடன் சேர்த்துவிடும் நிகழ்வு இடம்பெறுகின்றது. இதன் பின் மீண்டும் இரு தேர்களும் கொம்பு முறி நிகழ்விடத்தினை நோக்கி வருகின்றன. இரு தேர்களும் தாயம்மன் கோயிலை நோக்கிப் போகும் போதும், பின்னர் அங்கிருந்து திரும்பி வரும் போதும் தோள்களில் வைத்துச் சுமந்துதான் கொண்டு செல்லப் படுகின்றன. ஒவ்வொரு ஊரினை அடையும் போதும் ஊரின் எல்லையில் அந்த ஊரைச் சேர்ந்த ஒன்பது பேர் தேரினைச் சுமப்பதற்காகக் காத்திருப்பர். இவர்கள் விரதமிருந்து பக்தியுடன் இருப்பர். அவர்களது ஊரின் தொடக்க எல்லையில் இருந்து தேரினைச் சுமந்து சென்று அவர்களின் ஊரின் முடிவில் அடுத்த ஊராரின் தொடக்க எல்லையில் காத்திருப்பவர்களிடம் ஒப்படைக்கின்றனர். அங்கிருந்து அந்த ஊர்க்காரர் தேர்களைப் பொறுப்பெடுத்துச் சென்று அவர்களின் ஊரின் முடிவில் அடுத்த ஊரவர்களிடம் ஒப்படைக்கின்றனர். போகும் போதும் வரும் போதும் இவ்வாறே இடம்பெறுகின்றது.

போகும்போது தேர்கள் எங்கும் தரிப்பதில்லை. அப்போது கோயிலை நோக்கிச் செல்லுதல் மட்டுமே நோக்காக இருக்கின்றது. திரும்பி வரும்போது ஒவ்வொரு ஊரிலும் மக்கள் நிறைகுடம் வைத்து அம்மனை வரவேற்பதுடன் வருபவர்களுக்குத் தேனீர், இளநீர், சிற்றுண்டி போன்றவற்றினை வழங்கி அவர்களையும் உபசாரம் செய்கின்றனர். தாயம்மன் கோயிலில் இருந்து புறப்படுகின்ற தேர்கள் முதலில் கங்குவேலிக்கு வருகின்றது. அங்குள்ளவர்கள் உடுக்கடித்து அம்மனுக்கு அகவல், காவியம் என்பவற்றைப் பாடி வழிபாடு செய்கின்றனர். இதனையடுத்து மல்லிகைத் தீவுக்கு வருகின்றது. மல்லிகைத்தீவை அடைந்ததும் அங்குள்ள பெண்கள் குரவையிடுவதோடு அம்மனைச் சுற்றி வட்டமாக நின்று கும்மியடிக்கின்றனர். அங்குள்ள சிவன் கோயிலில் வைத்துப் பூசை வழிபாடுகளும் செய்யப்படுகின்றன. மல்லிகைத்தீவுக்கு அடுத்து பெருவெளிக்கு வரும்போது அங்கு வாழும் குயவர் பெண்கள் தேரினைக் கண்டதும் பாட்டுப் பாடிக் கும்மியடிக்கின்றனர். இவர்களைக் கடந்து வந்ததும் மட்டக்களப்பில் இருந்து வந்து பெருவெளியில் வாழுகின்றவர்கள் கை விளையாட்டு, கம்பு விளையாட்டு என்பவற்றினை நடத்திக் காட்டுகின்றனர். இதன் பின் பட்டித்திடலுக்கு வருகின்றனர். பட்டித்திடல் பறையர்கள் வாழுகின்ற

இடமென்பதால் தேர்களைக் கண்டதும் எல்லா வீடுகளிருந்தும் பறைகள் முழங்குகின்றன. ஒன்று சேர்ந்து ஒலிக்கும் பறையொலி பேரொலியாகத் தேர்களை வரவேற்கின்றது. இதனையடுத்து பாலத்தடிச்சேனைக்கு வருகையில் அங்கு உடுக்கடித்தும் அம்மானை, அகவல், காவியங்கள் போன்றவற்றைப் பாடியும் வரவேற்பதுடன் பாணக்கம் வைத்தும் வழிபடுகின்றனர். இதனுடன் அன்றைய நாள் நிகழ்வுகள் நிறைவுபெறுகின்றன. மறுநாள் காலையில் மீண்டும் ஊர் ஊராகச் செல்லுதல் ஆரம்பமாகின்றது.

ஏழாவது நாளில் தேர் சேனையூருக்கு வருகின்றது. அவ்வூர் மக்கள் காவியங்கள் பாடி அம்மனை வரவேற்று வழிபாடு செய்கின்றனர். அங்கிருந்து கட்டைமறிச்சான் சென்று கடற்கரைச்சேனைக்கு வருகின்றது. இதன்போது கடற்கரைச்சேனை மக்கள் வசந்தனடித்து அம்மனை வரவேற்கின்றனர். பின்னர், தேர் அங்கிருந்து திரும்பித் தனது இருப்பிடம் நோக்கி வருகின்றது. கடற்கரைச்சேனை வரையுமே தாயம்மனுக்குரிய இடமாகச் சொல்லப்படுகின்றது.

தேர் மீண்டும் பள்ளிக்குடியிருப்பை வந்தடைந்ததன் பின்னர் எட்டாம் நாள் காலையில் சரிகொம்பு முறித்தல் இடம்பெறுகின்றது. கொம்பிழுத்தலின் இறுதிநாளான அன்று தாயம்மன் கோயிலில் இருந்து கொண்டு வரப்பட்ட இரு பெரியகொம்புகளும் கொழுவப்பட்டுத் தயார்படுத்தப்படுகின்றன. அம்மனின் கொம்பான தென்சேரிக் கொம்பு செவ்வாய்க் குற்றியுடன் இணைக்கப்படுகின்றது. செவ்வாய்க் குற்றி முருகனாகக் கருதப்படுகின்றது. அதாவது, அம்மனுக்கு உதவுவதற்காக முருகன் (மகன்) அவருடன் இணைந்திருப்பதை இது குறிக்கின்றது. மையப் பகுதியில் நடுவர்களான விஸ்ணுவுக்கும், பிள்ளையாருக்கும் பெரிய மடைகள் வைக்கப்படுகின்றன. அவற்றின் முன்னாலேயே கொம்புகள் கட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு கொம்புகளும் நிகழ்விடமும் தயார்படுத்தப்பட்டதன் பின்னர் கொம்புகளுக்குப் பூசை நடைபெறுகின்றது. பின்னர் பூசகர் தனது தலைப்பாகையினை அவிழ்த்து அதனை வீசியவாறு சத்தமிட இரு பகுதியினரும் கொம்பிழுக்க ஆரம்பிக்கின்றனர். இது பற்றிப் பூசகர் குறிப்பிடுகையில் "அம்மனின் பக்கம் அதிகமான ஆட்கள் நின்று கொம்பினை இழுப்பர். அவ்வாறிருந்தும் சிவனின் அருளினால் செவ்வாய்க் குற்றியில் சுற்றப்பட்ட கயிறுகள் அவிழ்ந்து கொண்டு வருமாறு சிவனின் பக்கத்தினர் இழுத்து விடுகின்றனர். ஆயினும், அம்மன் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகச் சிவன் பகுதியினரின் ஆக்ரோசம் தணிக்கப்படுகின்றது" என்கிறார். இதன்பின்னரே அம்மன்

*வெல்லுகின்றார் எனவும் இங்கு அம்மனின் வெற்றி சிவன் பக்கத்தினரின் விட்டுக் கொடுப்பாகவே அமைகின்றது எனவும் கூறுகின்றார். ஏனெனில், அம்மன் வெற்றியடையவில்லையெனில் ''கோதாரி'' (கொள்ளை நோய்) வந்துவிடும் என்கிறார். அம்மன் வெற்றியடைந்ததும் தென்சேரியினரால் வெற்றி ஆரவாரங்கள் காட்டப்படுகின்றன. இதன் பின்னர் அம்மனின் கொம்பு கோயிலுக்குள் (தற்காலிக மாலுக்குள்) கொண்டு செல்லப்பட்டுப் பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றன. பின்னர் மீண்டும் கொம்புகள் கொழுவப்பட்டு இழுக்கப்படுகின்றன. இதன்போது சிவனுக்குரிய பெரிய கொம்புடன் அம்மனின் கொம்பாக சிறிய கொம்பு கொழுவப்பட்டு இழுக்கப்படு கின்றது. இதில் அம்மனின் கொம்பு உடைகின்றது. சிவன் வெற்றி பெற்றதாக வடசேரியினர் ''ஊ'' எனச் சத்தமிட்டு ஆரவாரிக்கின்றனர். இது கொம்பிழுத்தல் பற்றிய மேற்குறித்த புராணக் கதையின் படி, அம்மன் தன் தவறை உணர்ந்து, கணவரின் தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாமல், ஆணுக்குப் பெண் அடங்கிப் போகவேண்டியவரே என்பதையுணர்ந்து சிவன் வெல்வதே சரியானது என மீண்டும் கொம்பு கொழுவி இழுக்கச் சொன்னதைச் செய்வதாகப் பூசகர் குறிப்பிடுகின்றார். இதனால் இறுதியில் இங்கு சிவனே வெற்றியடைவதாக உள்ளது.*

*கொம்பிழுத்தல் முடிவடைந்ததும் அன்றிரவு அம்மன், சிவன், முருகன், அக்கினி ஆகிய தெய்வங்களுக்குத் தனித்தனியே பொங்கல் வைக்கப்பட்டு, அவை படைக்கப்பட்டுக் குளிர்த்தி பாடிப் பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இதனுடன் அன்றைய நிகழ்வு முடிவடைகின்றது. இதனையடுத்து நிகழ்வில் பங்குகொண்ட அனைவரும் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளாது கலைந்து செல்லுகின்றனர். ஏனெனில், சொல்லிச் சென்றால் அம்மன் முதலான காவல் தெய்வங்களும் சென்றுவிடுவார்கள் எனவும் அவ்வாறு சென்றால் அம்மனைக் காவல் தெய்வமாக நிலைப்படுத்தும் தமது நோக்கம் நிறைவேறாமல் போய்விடும் என்பதும் அவர்களின் நம்பிக்கையாக உள்ளது. இதிலிருந்து எட்டாவது நாள் அதாவது மறுதிங்கள் அழைத்து வரப்பட்ட அம்மனை மீண்டும் கொண்டு சென்று நீலாப்பளையில் வைத்து அபிசேகம் செய்து வழிபடுகின்றனர். அத்துடன் ஆதி வைரவருக்குச் சேவல் பலியிடப்படுதலும் இடம்பெறுகின்றது. கிட்டத்தட்ட மூன்று வாரங்கள் இந்நிகழ்வுக்காக ஒதுக்கப்படுகின்றன. அத்தனை நாட்களும் தமது வேலைகளை ஒதுக்கி வைத்து, இந்நிகழ்வில் பங்குபற்றும் அவர்களின் உணர்வு நிலை இதன் மீதான ஈடுபாட்டினையும் நம்பிக்கையையும் எடுத்துக்காட்டுவதாக*

*உள்ளது. அதுமட்டுமன்றி மூதூர்ப் பகுதியிலுள்ள எல்லா ஊர்களையும், மக்களையும் இணைக்கின்ற ஒரு நிகழ்வாகவும் இடம்பெறுகின்றமை கவனிக்கத்தக்கது. இந்நிகழ்வு பள்ளிக்குடியிருப்பில் உள்ள குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரால் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் ஏதோ ஒரு வகையில் பங்குகொள்ளக் கூடியதாக உள்ளமை குறிப்பிட்ட ஒரு குழுமத்திற்கான அல்லது சமூகத்திற்கான சடங்கு என்பதைக் கடந்து பொதுமைத் தன்மையினை ஏற்படுத்துவதாக உள்ளது. ஆயினும், குறிப்பாக ஆண்களுக்கு உரியதாக உள்ளமை வெளிப்படை. ஏனெனில், மூன்று வாரங்கள் நடைபெறும் இச்சடங்கு முழுக்க முழுக்க ஆண்களுக்குரிய நிகழ்த்துகையாகவே உள்ளது. ஆறாம் நாள் தேர்கள் இரண்டும் தாயம்மன் கோயிலுக்குச் சென்று திரும்பி வரும் போது பெண்கள் நிறைகுடம் வைத்து அம்மனை வழிபடுகின்றனர். இது மட்டுமே பெண்களின் பங்களிப்பாக உள்ளது.*

***நீலாப்பளைப் பத்தினியம்மன் வழிபாடும் மேல்நிலையாக்கமும்***

*மேற்குறித்த நிகழ்த்துகையினை நோக்குமிடத்து நிகழ்த்துகைக்கும் புராணத்துக்குமிடையே முரண்பாடுகள் இருப்பதைக் கண்டுகொள்ள முடியும். புராணம் சிவன் - பார்வதி சம்பந்தப்பட்டதாக இருக்க, நிகழ்த்துகையின் முக்கிய சடங்குகள் பத்தினியம்மனை முன்னிறுத்தியே செய்யப்படுகின்றமை அடிப்படை முரணாக உள்ளது. இதற்கான நியாயமாக ஒரு கதை சொல்லப்படுகின்றது. அதாவது தக்கன் யாகத்தில் விழுந்து இறந்து போகின்றார் தாட்சாயணி. சிவன் தாட்சாயணியைத் தூக்கிக் கையில் வைத்துக்கொண்டிருக்கின்றார். இதைக் கண்ட விஸ்ணு சக்கராயுதத்தைத் தாட்சாயணி மீது ஏவ, தாட்சாயணி 56 துண்டுகளாக வெட்டப்படுகின்றார். வெட்டப்பட்ட அத்துண்டுகள் வெவ்வேறு இடங்களில் விழுகின்றன. அவ்வாறு விழுந்த இடங்களே இன்றுள்ள சக்தி பீடங்கள். அந்த 56 துண்டுகளில் ஒன்று கோகர்ணத்தில் (திருகோணமலை) விழுகின்றது. கோகர்ணத்தில் விழுந்த இடந்தான் நீலாப்பளை. கண்ணகி மதுரையை எரித்த பின்னர் வந்து தங்கிய இடம் நீலாப்பளைதான். நீலாப்பளை காளி பீடம் என்பதனால் நீலாப்பளைப் பத்தினியம்மனைப் "பத்தினிக் காளி" எனச் சொல்வது வழக்கம் எனக் கூறுகின்றனர்.*

*இக்கதை இந்தியாவில் வழங்குகின்ற 51 சக்தி பீடங்கள் தோன்றிய கதையின் உள்ளூர்மயப்படுத்தப்பட்ட ஒரு வடிவம். இது நீலாப்பளைப் பத்தினியம்மன் கோயில் உருவாக்கத்தைச் சொல்கின்ற அதேவேளை பார்வதிதான் பத்தினியம்மன் எனவும் கூறுகின்றது. இத்தன்மை நீலாப்பளைப் பத்தினியம்மன் பார்வதியாக மேல்நிலையாக்கப்*

படுவதனைக் காட்டுகின்றது. இதுமட்டுமல்லாமல் நிகழ்த்துகைக்கும் புராணத்துக்கும் இடையேயான முரண்களும் பத்தினியம்மன் மேல்நிலையாக்கப்படுவதை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. எடுத்துக்காட்டாக, முதலாவதாக, ஐந்து நாட்கள் வரையும் சிவனும், அம்மனும் (பார்வதி) வெள்ளை நிற ஆடைகளால் அலங்கரிக்கப்படுவதற்கு, அம்மன் மாதவிலக்காகியிருந்ததாகப் புராணத்தில் சொல்லப்படுவதைக் காரணம் காட்டுகின்றனர். அம்மனுக்கு மாதவிலக்கு ஏற்பட்டதால் தீட்டுப்பட்ட அவரை மட்டும் வெள்ளை நிறத்தில் அலங்கரித்திருந்தால், மேற்குறித்த காரணம் புராணக் கதையுடன் பொருந்திப் போவதாக இருக்கும். அவ்வாறில்லாது, தீட்டில்லாத சிவனும் வெள்ளை நிறத்தினால் அலங்கரிக்கப்படுவது முரணாகவும் பொருத்தமற்றதாகவும் உள்ளது. இரண்டாவதாக, மாதவிடாயுற்ற பார்வதி யாருடைய பார்வையிலும் படாதவாறு தனித்திருந்ததாகவே புராணம் கூறுகின்றது. அவ்வாறாயின் அக்காலப் பகுதியில் கொம்பிழுத்தல் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை. ஆனால் நடைமுறையில் அந்நாட்களிலும் கொம்பிழுத்தல் நடைபெறுவதோடு சிவனுடன் அம்மனும் ஊருக்குள் கொண்டு செல்லப்படுகின்றார். இதுவும் புராணத்திலிருந்து சடங்கியல் நடைமுறை வேறுபடுவதைக் காட்டுகின்றது. மூன்றாவதாக, மாதவிலக்கான பெண் தீண்டத்தகாத ஒருவராக அதாவது சாதியப்படிநிலையில் கீழான ஒருவராகப் பார்க்கப்படுகின்றார். அதாவது, மாதவிடாயுற்ற ஒரு பெண்ணை முதல் நாள் பறைச்சி, இரண்டாம் நாள் பள்ளுவிச்சி, மூன்றாம் நாள் முக்குவச்சி, நான்காம் நாள் நளத்தி, ஐந்தாம் நாள் பிராமணத்தி எனக் குறிப்பிடுகின்றனர். சாதியப்படிநிலை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகின்ற போது மட்டுமே மேற்குறித்தவாறு ஒப்பிட்டுச் சொல்லமுடியும். அவ்வாறு கடைப்பிடிக்கப்படுகின்றதெனில், ஆறாவது நாள் தாயம்மன் கோயிலில் இருந்து பள்ளிக்குடியிருப்புக்குத் திரும்பி வருகையில் ஒவ்வொரு ஊர் மக்களாலும் அவரவரின் தனித்துவத்துடன் அம்மன் வரவேற்கப்படுவதுடன் சிவனின் தேரோடு, அம்மனின் தேரும் சுமந்து கொண்டு வரப்படுவது முரணாக உள்ளது. மேலும், இது சாதிப் பிரிவினைகள் கடந்து மக்கள் ஒன்றிணைகின்ற தன்மையினையே காட்டுகின்றது. மாறாக, சாதியப்படிநிலை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் ஒவ்வொரு ஊரிலும் அம்மன் வரவேற்கப்படுவதும், அம்மன் தேரினைச் சுமப்பதென்பதும் சாத்தியமற்றதே.

இம்முரண்பாடுகள் கண்ணகி / பத்தினியை வைதீக நெறிக்குரியவராக மேல்நிலைப்படுத்துவதையே காட்டுகின்றன. தாய்வழிச் சமூகம் சிதைந்து தந்தைவழிச் சமூகம் மேலோங்கிய காலத்தில் உருவான ஆணாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடாகவே சைவ, வைணவ சமயக் கடவுளர்கள் உருவாக்கப்படுகின்றனர். இக்காலகட்டத்தில் அப்போது இருந்த தாய்த்தெய்வங்களைத் தந்தைக் கடவுளர்களுக்கு மனைவியாக்குவதன் மூலம் அவர்களைத் தமக்குள் உள்வாங்குவதோடு அவர்களை இரண்டாம் நிலைப்படுத்தவும் செய்தனர். சைவம் தனிப்பெரும் சமயமாகக் கோலோச்சிய காலகட்டத்தில் இத்தகைய பல மாற்றங்கள் இடம்பெற்றன. இதன்போது அவற்றினை நியாயப்படுத்துவதாகப் புராணக் கதைகளும் உருவாக்கப்படுகின்றன. மதுரை மீனாட்சியம்மன், சிதம்பரம் தில்லைக்காளி பற்றிய புராணக்கதைகள் இத்தகையனவே. மேலும், தீட்டு, கற்பு பற்றிய கற்பிதங்களை ஏற்படுத்தும் வகையில் சடங்குகளையும் நடைமுறைப்படுத்துகின்றனர். இதனூடாகப் பெண் தெய்வங்களைச் சைவமாக மேல்நிலை யாக்குகின்ற அதேவேளையில் கோயில் சார்ந்த சடங்குகள், நடைமுறைகளில் இருந்து பெண்கள் வெளியேற்றப் படுவதோடு அவர்களுக்கான பொது வெளி மறுக்கப்பட்டு, வீடு - வீடுசார்ந்த அகவெளிக்குள் குறுக்கப்படுகின்றனர்.

கேரளத்தில் செங்கனூர் பகவதியம்மன் கோயிலில் மாதத்தில் மூன்று நாட்கள் அம்மன் கோயில் கருவறையில் இருந்து வெளியே எடுக்கப்பட்டு வேறான ஒரு இடத்தில் வைக்கப்படுகின்றார். ஏனெனில், குறித்த நாட்களில் அம்மன் மாதவிடாயுற்றிருப்பதனால் அவரைக் கோயிலினுள் இருந்து வெளியேற்றித் தனியானதொரு இடத்தில் வைக்கின்றனர். இதனை ஒரு சடங்காகவே செய்துவருகின்றனர். இது பற்றி டாக்டர். பி. நசீம்தீன் கூறுமிடத்து, கண்ணகி பகவதியாக மேல்நிலையாக்கம் செய்யப்பட்டதன் வெளிப்பாடே எனக் கூறுகின்றார் (கருத்தரங்கம், 2022). இதேபோன்று பள்ளிக்குடியிருப்புக் கொம்புமுறி நிகழ்த்துகை பற்றிய புராணக் கதை, நீலாப்பளையம்மன் கோயில் உருவாக்கம் குறித்த புராணக் கதை ஆகியன பத்தினியம்மனைப் பார்வதியாக மேல்நிலையாக்கம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட கதைகளாகவே தோன்றுகின்றன. ஏனெனில், இக்கதைகள் தமிழகத்தில் வழங்குகின்ற புராணக் கதைகளின் வடிவமாற்றமாகவே உள்ளன. சிதம்பரம் தில்லைக்காளி பற்றிய புராணக் கதையை ஒட்டியதாகக் கொம்பு முறித்தல் பற்றிய தோற்றக் கதையும், 51 சக்தி பீடங்களின் தோற்றம் பற்றிய புராணக் கதையின் வடிவமாக நீலாப்பளைப் பத்தினியம்மன் கோயில் தோற்றக் கதையும்

இருக்கின்றதை அவதானிக்கலாம். இவ்விரு கதைகளும் சிவனைத் தனிப் பெருங்கடவுளாக, சக்தி மிக்கவராகக் கட்டமைக்கும் கதைகளே. அத்தகைய புராணக் கதைகளைத் தமது தேவைக்கேற்ப மாற்றிச் சொல்வதன் மூலமாகப் புதிய புராணக்கதைகளை உருவாக்கியதோடு நீலாப்பளைப் பத்தினியம்மனைப் பார்வதியாகவும் மேல்நிலையாக்கம் செய்ய முயலுகின்றனர்.

இம்மேல்நிலையாக்கம் கண்ணகியை மேல்நிலைப்படுத்தல் என்றில்லாமல் நீலாப்பளையம்மனுக்கு மட்டும் உரியதாக உள்ளமை நோக்கத்தக்கது. ஏலவே வடக்கில் ஆறுமுக நாவலரின் செல்வாக்கு மற்றும் அங்கிருந்த சமூக, பொருளாதாரச் சூழல்களினால் கண்ணகியம்மன் கோயில்கள் பல இராஜராஜேஸ்வரியம்மன், புவனேஸ்வரி அம்மன் என மேல்நிலைப்படுத்தப்பட்டமை யாவரும் அறிந்த விடயமே. மேல்நிலையாக்கப்பட்ட இவ்விடங்களில் கண்ணகி என்ற பெயர் மட்டுமன்றி ஆலய அமைப்பு மற்றும் வழிபாடுகளும் மேல்நிலைப்படுத்தப்பட்டன. அதாவது அவை ஆகமவயப்படுத்தப்பட்டன. ஆனால் நீலாப்பளையில் தோற்றக் கதைகள் மட்டுமே மேல்நிலைப்படுத்தப் பட்டுள்ளனவே தவிர, ஆலயத்தின் அமைப்போ வழிபாட்டு நடைமுறைகளோ பழைமையானதாக அதாவது நாட்டார் வழிபாட்டுக்குரியதாகவே உள்ளன. அம்மனை மேல்நிலையாக்கம் செய்வது நோக்கமாக இருந்தால் கோயில் அமைப்பும் வழிபாட்டு முறைகளும் ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை என்ற கேள்வியை எழுப்புகின்றது.

இதன்போதே இக்கோயில் அமைந்துள்ள சமூக, அரசியல் சூழல் பற்றி நாம் நோக்கவேண்டி உள்ளது. ஆரம்பத்தில் இக்கோயில் அமைந்துள்ள இடத்தில் அதாவது நீலாப்பளைக் கிராமத்தில் தமிழர்கள் வசித்து வந்துள்ளனர். இதைச் சுற்றி வரச் சிங்கள மக்கள் வசித்து வந்துள்ளனர். 1977 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது இங்கிருந்த தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டதோடு கோயிலும் உடைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கோயிலைச் சூழ உள்ள இடங்கள் சிங்களவர்களின் குடியிருப்புக்களாக மாறியுள்ளன. இதற்கு முன்னரும் அல்லை - கந்தளாய் நீர்ப்பாசனத் திட்டங்களின் போதான சிங்களக் குடியேற்றங்கள், மீண்டும் மீண்டும் இடம்பெற்ற வன்முறைகள் போன்றவற்றின் போதும் தமிழர்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் 1977 இனக்கலவரத்தினையடுத்துக் கோயில் பூசை வழிபாடுகள் இல்லாமற்போய் அனாதரவாக விடப்பட்டிருந்தது. இன்று நீலாப்பளை

*'நீலாப்பொல' என்ற சிங்களக் கிராமமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது. இச் சூழ்நிலையிலேயே இருபது வருடங்களின் பின்னர் 1997 இல் இக்கோயில் மீண்டும் திறக்கப்பட்டு ஒவ்வொரு வாரமும் திங்கட் கிழமைகளில் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. வைகாசி விசாகம் அன்று பொங்கல் வழிபாடும் நிகழ்த்தப்படுகின்றது. இவ்வழிபாட்டு நேரங்களில் மட்டும் சூழ உள்ள மக்கள் அங்கு சென்று வருகின்றனர். தற்போது, ஏனைய கண்ணகியம்மன் கோயில்களைப் போல அதிகளவான பக்தர்கள் கூடுகின்ற இடமாக இல்லை. ஏனெனில், சுற்றி வரச் சிங்கள மக்கள் இருப்பதனால் தமிழ் மக்களிடம் இன்னமும் அச்சம் விட்டுப் போகாத நிலைமையே உள்ளது.*

*இந்நிலையில், இலங்கையின் வடக்குப் பகுதியில் பேரினவாத அரசினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்பு யுத்தம் நடந்துகொண்டிருந்த சமயத்தில் 2006, 2007 காலப் பகுதியில் நீலாப்பளைப் பத்தினி அம்மன் கோயில் வளாகத்தினுள்ளே சூழவுள்ள சிங்கள மக்களும் பௌத்தத் துறவிகளுமாக இணைந்து விகாரை ஒன்றினை அமைக்க முயற்சித்துள்ளனர். பழைமையானதும் கருங்கல்லாலானதுமான பத்தினியம்மன் கோயில் கட்டிட அமைப்பு பௌத்த மரபுக்குரியது எனக் கூறிய அவர்கள் அங்கு விகாரை கட்டப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்துள்ளனர். பூசகரும் கோயில் நிர்வாகத்தினரும் ஏதும் செய்ய முடியாத நிலையில் அம்மனிடம் தங்கள் குறையைச் சொல்லிவிட்டு அமைதி காத்துள்ளனர். ஒருநாள் பூசகரை அழைத்துக்கொண்டு கருவறைக்குள் நுழைந்த அதிகாரி பயத்துடன் அங்கிருந்து வெளியேறியதுடன் இது பத்தினிக்குரிய இடமே எனவும் இங்கு விகாரை கட்ட முடியாது எனவும் கூறிச் சென்றுள்ளார். இதன் பின்னர் விகாரை கட்டும் அவர்களின் முயற்சி கைவிடப்பட்டுள்ளது. சிங்களப் பிரதேசங்களிலுள்ள பத்தினி கோயில்களின் வளாகங்களில் அண்மைக் காலங்களில் பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளன, சிறிய கோயிலாயின் சிறு பந்தல் போன்ற கோயிலினுள் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இது பத்தினி கோயிலைச் பௌத்த சிங்களமயப்படுத்துவதன் அடையாளமாகும். இது போன்றதொரு முயற்சியே நீலாப்பளையிலும் இடம்பெற்றுள்ளது. ஆனால் நடைமுறைப்படுத்த முடியவில்லை.*

*இம்முயற்சி தடுக்கப்பட்ட போதிலும் இதுபோன்றதொரு நிலைமை என்றாவது ஒருநாள் வரலாம் என்ற அச்சம் மக்களிடம் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. இந்த அச்சம் பத்தினியைப்*

*பார்வதியாக மேல்நிலைப்படுத்தக் காரணமாய் அமைந்திருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில், நீண்ட காலத்தின் பின்னர் 2010 இல் மீண்டும் கொம்புமுறி நிகழ்த்துகை ஆரம்பிக்கப்பட்ட போதே "சிவசக்தியம்மன் கொம்புமுறி விளையாட்டுச் சங்கம்" உருவாக்கப்படுகின்றது. பத்தினியம்மன் கோயில் பௌத்த சிங்களமயப்படுவதைத் தவிர்ப்பதற்காக அவர்களிடம் பத்தினி - பாலங்கா சம்பந்தப்பட்டதாகக் காணப்படுகின்ற 'அங்கெலிய' நிகழ்த்துகையில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதாக உருவாக்கப்பட்ட கதைகளாகவே பள்ளிக்குடியிருப்பு கொம்புமுறி நிகழ்த்துகை, நீலாப்பளையம்மன் குறித்த தோற்றக் கதைகள் போன்றவை காணப்படுகின்றன.*

*கொம்புமுறி நிகழ்த்துகை பற்றிய தோற்றக் கதை கண்ணகியுடன் தொடர்புபடாமல் பார்வதியுடன் இணைக்கப்பட்டு மேல்நிலையாக்கப்படுகின்ற போதிலும், பொதுவாகக் கொம்புமுறி நிகழ்த்துகை பற்றிக் கண்ணகியுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படுகின்ற கதை, நிகழ்த்துகையில் இருந்து முற்றுமுழுதாக விலத்திச் செல்லாமல் இருப்பதை அவதானிக்கலாம். பொதுவாக இந்நிகழ்த்துகையில் கண்ணகியம்மன் வெற்றி பெற வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக உள்ளது. ஏனெனில் அப்போதே கண்ணகி மனங்குளிர்ந்து தமக்கு வரம் அருள்வார் எனவும் அதன் மூலமாக விளைச்சல் பெருகுவதுடன், நோய் பிணிகளும் இல்லாமற்போகும் எனவும் நம்புகின்றனர். இந்நம்பிக்கை பள்ளிக்குடியிருப்பிலும் உள்ளது. அதனாலேயே நிகழ்வின் இறுதியில் அம்மனைத் தமது ஊருக்குக் காவலாக நிறுத்திச் செல்கின்றனர். அவ்வாறு நிறுத்துவதற்காகவே குறித்த நிகழ்த்துகையினை நிகழ்த்துகின்றனர். ஆனால், தோற்றக் கதை சைவசமய மேல்நிலையாக்கமாக இருப்பதனால் இறுதியில் சிவன் வெற்றியடைய வேண்டியது அவசியமாகின்றது. இந்நிலையில் அவர்களின் விருப்பத்திற்கும் நடைமுறைக்கும் இடையில் ஏற்படும் முரண்பாட்டினைச் சமரசம் செய்வதாக முதலில் அம்மன் வெற்றியடைகின்றார். ஆனால் அந்த வெற்றியினைச் சிவனின் விட்டுக் கொடுப்பினால் ஏற்படுவதாகக் கதை சொல்கின்றனர். இதேபோன்று சிவனை மையநிலைப்படுத்தலை பார்வதியே விரும்புவதாகவும் சொல்கின்றனர். சிதம்பரம் தில்லைக்காளி பற்றிய கதையில் தில்லைக்காளி சிவனின் தந்திரத்தினால் தோல்வியடைந்து மையமிழக்க வைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இங்கு சிவனின் விட்டுக் கொடுப்பினால் பார்வதி வெற்றியடைவதாகவும், வெற்றி பெற்ற*

பார்வதி தன் கணவரே உண்மையாக வெற்றியடைய வேண்டியவர் என்பதை உணர்ந்து மீண்டும் விளையாடிச் சிவன் வெற்றி அடைந்ததாகவும் கதை சொல்கின்றனர். ஆயினும் நடைமுறையில் சிவன் வெற்றியடைவதாக இடம்பெறுகின்ற இறுதி நிகழ்த்துகையில் இரு பெரிய கொம்புகளுக்குப் பதிலாக, சிவனுக்குரிய பெரிய கொம்புடன் அம்மனின் கொம்பாகச் சிறிய கொம்பினையே கொழுவுகின்றனர். எனவே, இது சிவனை வெற்றியடையச் செய்வதற்காகச் செய்கின்ற ஒரு உத்தியாகவே உள்ளது. தவிர, அம்மனின் வெற்றியே கொண்டாடப்படுகின்றது. இத்தன்மை முன்னர் அம்மன் வெற்றி பெறுவதாகவே நிகழ்த்துகை இடம்பெற்று வந்துள்ளதையும் பின்னர் புதிய புராணம் உருவாக்கப்படுகையில் அதற்கேற்ப நிகழ்த்துகையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமையையும் காட்டுகின்றது. அதனாலேயே சிவனின் வெற்றி கொண்டாடப்படாமல் அம்மனின் வெற்றி கொண்டாடப்படுகின்றது. இது, இந்நிகழ்த்துகையினைச் சிவன் பார்வதி தொடர்பானதாக மேல்நிலைப்படுத்திக் கதைகள் கட்டப்பட்ட போதிலும் மக்களின் நம்பிக்கைகளும் நடைமுறைகளும் முன்னர் இருந்தவாறே தொடர்வதைக் காட்டுகின்றது. கண்ணகியைப் பார்வதியாக மேல்நிலைப்படுத்துகையில் மக்களின் நம்பிக்கைக்கும் புராணத்துக்குமிடையில் ஏற்படுத்தப்படுகின்ற சமரச முயற்சியாகவே அம்மனின் வெற்றி சிவனின் விட்டுக்கொடுப்பினால் ஏற்பட்டதாகக் கதையைப் புனைகின்றனர்.

சைவசமயம் கட்டமைக்கும் சிவனின் வெற்றி ஆணாதிக்கத்தின் வெற்றி. ஆனால் அம்மனின் வெற்றி வளமையின் வெற்றி. இதுவே வாழ்க்கைக்கு அவசியமானதாக உள்ளது. இதனாலேயே இரு பகுதிகளாகப் பிரிந்து நிகழ்த்துகையில் ஈடுபடுகின்ற போதிலும் இறுதியில் அம்மன் வெற்றியடைய வேண்டும் என்பது அனைவரது விருப்பமாகவும் உள்ளது. அதற்காகவே கொம்புமுறி நிகழ்த்துகையினையும் மேற்கொள்ளுகின்றனர். எனவே இந்த நிகழ்த்துகை ஏற்படுத்துகின்ற ஏதோ ஒரு உணர்வு அவர்களை உற்சாகமடையச் செய்வதோடு அவர்களைத் தொடர்ந்து இயங்கவும் வைக்கின்றது. இதனால் இங்கு இடம்பெறும் மேல்நிலையாக்கம் பகுதியளவிலான மேல்நிலையாக்கமாகவே உள்ளது. பத்தினியைப் பார்வதியாகக் கட்டமைப்பதன் மூலம் நீலாப்பளைப் பத்தினியம்மன் கோயிலைத் தமிழ்ச் சைவர்களின் கோயிலாக அடையாளப்படுத்துதலாகவே உள்ளது.

மேலே கூறப்பட்டவற்றில் இருந்து நோக்குகையில், நீலாப்பளைப்பத்தினியம்மன் கோயிலைச் சிங்கள பௌத்தமாவதில் இருந்து தடுக்க வேண்டியதொரு தேவை ஏற்படுகின்றது. அதற்கான வழி முறையாக பத்தினி அம்மனைச் சைவநெறிக்குள் கொணர்ந்து பார்வதியாக மேல்நிலைப்படுத்துகின்றனர். இதன்போது பத்தினியம்மன் வழிபாட்டுடன் இணைந்ததாக இருந்த கொம்பு முறி நிகழ்த்துகையும் சிவன் - பார்வதிக்கு இடையிலான மோதலாக மேல்நிலைப்படுத்தப்படுகின்றது. இந்த மேல்நிலைப்படுத்தல் முழுக்க முழுக்க ஆணாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடாகவே இடம்பெறுகின்றது. ஏனெனில், பெண் ஆணுக்கு அடிமையானவள் என்பதும் ஆணை வெற்றி அடையச் செய்வதே பெண்ணின் கடமை என்பதும் பொதுப் புத்தியில் உறைந்துபோன விடயங்களாக உள்ளன. அதேவேளையில் நம்பிக்கை அவ்வாறில்லாது இருக்கின்றது. இந்த இரண்டுக்கும் இடையில் ஈடாட்டம் ஏற்படுவதைப் புராணம் காட்டுகின்றது. ஆயினும் பெண்ணின் வெற்றி ஆணாதிக்கச் சமூகத்தின் வெளிப்பாடான சைவத்துக்கு முரணாக அமைந்துவிடும் என்பதால் சிவனின் விட்டுக் கொடுப்பினால் அம்மன் வெற்றி அடைவதாகவும் பின்னர் அம்மனே சிவன் வெல்ல வேண்டுமென்பதை விரும்புவதாகவும் கதை சொல்லுகின்றனர்.

இவற்றினூடாக நோக்கும்போது ஒரு சமூகம் தான் வாழுகின்ற சூழல், அது ஏற்படுத்துகின்ற நிலைமைகள், தேவைகளுக்கேற்பப் புராணங்களை உருவாக்குகின்றது. இதன்போது முன்னுள்ள புராணங்களில் இருந்து தமக்கான கதையினைத் தேர்வு செய்து கொள்கின்றனர். இத்தேர்வு அவர்களின் தேவை மற்றும் நிகழ்த்துதலுக்கேற்றவாறாக அமைகின்றது. அவ்வகையில் பள்ளிக்குடியிருப்பில் இடம்பெறுகின்ற கொம்புமுறி நிகழ்த்துகை ஆணாதிக்கச் சமூகத்தின் சிந்தனை வெளிப்பாடாக உள்ளது. அதற்கேற்ப நீலாப்பளைப் பத்தினி அம்மனைத் தமிழ்ச் சைவமாகக் கட்டமைக்க முயலுகையில் சிவனின் வெற்றியே முன்னிலைப்படுத்தப்படுகின்றது. ஆயினும், பழமையான நடைமுறை மற்றும் நம்பிக்கைகளில் இருந்து முற்றாக வேறுபடுவதிலும் ஓர் அச்ச நிலை காணப்படுகின்றது.

"மனிதன் தனது வாழ்க்கைச் செயல்பாட்டைப் பற்றிய உணர்வைக் கொண்டிருக்கிறான். விலங்குகளுக்கு அந்த உணர்வு இல்லை. இதுதான் அவனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்துகிறது. அவனால் சிந்தனையளவில் தனது செயல்பாட்டிலிருந்து விலகி, அதைப் பற்றிய ஒரு கருத்தை உருவாக்கிக்கொள்ள முடியும். இக்கருத்து

உண்மையாகவே மேற்கொள்ளப்படும் யதார்த்தமான செயல்பாட்டிலிருந்து மாறுபட்டதாகும். இதைப் புரிந்து கொண்டால் தான் ஆதிகாலச் சடங்குகளைப் புரிந்துகொள்ள முடியும். சடங்கு இன்னும் ஒரு நடைமுறைதான் ஆனால் உழைப்பு இயக்கத்திலிருந்து பிரிக்கப்பட்ட நடைமுறை" என்கிறார் ஜார்ஜ் தாம்ஸன் (2014: 69).

போலச்செய்தலாக அமையும் இச்சடங்குகள் மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படுவதன் மூலம் மக்களிடம் ஒரு கருத்து நிலையை ஏற்படுத்துகின்றன. சடங்குகளைப் போலவே, புராணங்களும் மக்களின் வாழ்வில் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்துவனவாக உள்ளன. கடவுளர்களின் அவதாரக் கதைகளைக் கூறுவதாக அமையும் அவை புனிதமானவையாக, கேள்விகளுக்கு அப்பாற்பட்டவையாகக் கருதப்படுகின்றன. புராணங்களும் சடங்குகளும் ஒன்றை ஒன்று சார்ந்து இயங்குவனவாகவே உள்ளன. பொதுவாக, புராணங்களை நிகழ்த்திக் காட்டுவதாகவே சடங்குகள் உள்ளன. புராணங்களை இணைத்துக் கொள்வதன் மூலம் அவை புனிதமுடையனவாக்கப்படுகின்றன. இதனால் சில இடங்களில் சடங்குகளுக்கு ஏற்பப் புராணங்களை உருவாக்குகின்றனர். இக்காரணத்தினால் புராணங்கள் நிலைத்த தன்மையுடையனவாக இல்லாமல் பலபடித்தானவையாக அமைகின்றன. ஏனெனில், புராணங்களை, அதன் புனிதத் தன்மையை நம்புகின்ற சமூகம் அதனைத் தனது பண்பாட்டுச் சூழலுக்கேற்றவாறு கட்டமைத்துக் கொள்கின்றது. உள்ளூர் அரசியல், வெளியாரினால் ஏற்படும் அழுத்தங்கள், ஆபத்துக்களில் இருந்து தப்பித்து தம்மை நிலைநிறுத்திக்கொள்ளல் போன்ற காரணங்களின்போது அதற்கேற்றவாறு புராணங்களை உருவாக்குதல் அல்லது ஏற்கனவே நிலைபெற்றுள்ள பெரும்புராணங்களுடன் தம்மை இணைத்துக்கொள்ளுதல் அல்லது மாற்றியமைத்தல் போன்ற போக்குகள் இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதேபொன்று நாட்டார் தெய்வங்களை மேல்நிலையாக்கும் போதும் இவ்வகையிலான புராணங்கள் கட்டமைக்கப்படுகின்றன. ஆனால், அத்தெய்வங்களுக்கான வழிபாட்டுச் சடங்குகளில் இத்தகைய புதிய மாற்றங்கள் உடனடியாக அமைவதில்லை. இதனால் புதிய தல வரலாறுகள், புராணங்கள் எழுதப்பட்டாலும் கூட அத்தலங்களில் நிகழ்த்தப்படும் சடங்குகள் அவற்றின் முந்தைய வரலாற்றினை வெளிப்படுத்துவனவாக அமைகின்றமை தவிர்க்க முடியாததாகின்றது. பள்ளிக்குடியிருப்பு கொம்புமுறி நிகழ்த்துகை இதற்குத் தக்க சான்றாக அமைகின்றது.

## துணைநூற்பட்டியல்

*கந்தையா, வி.சீ. (2002) மட்டக்களப்புத் தமிழகம். பிரான்ஸ் எக்ஸில்.*

*செல்வநாயகம், ஆ. (2021) தி/ பள்ளிக்குடியிருப்பு வரலாற்றுப் பார்வை. திருகோணமலை: அக்றா வெளியீடு.*

*தனஞ்செயன், ஆ. (2006) விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள். புதுச்சேரி: வல்லினம்.*

*தாம்சன், ஜா. (2014) மனித சாரம். தமிழில் எஸ். வி. ராஜதுரை. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.*

*பட்டுச்சாமி ஓதுவார், தி. (1959) பரஞ்சோதிமுனிவர் அருளிச்செய்த திருவிளையாடற் புராணம் (உரைநடை). திருப்பனந்தாள், காசிமடம்.*

Knox, R. (1681) *An historical relation of the island Ceylon in the East Indies*. London: Royal Society.

Shulman, D. (1980) *Tamil temple myths*. Princeton: Princeton University Press.

*தகவலாளர்கள்:*

*தவராசா, நீலாப்பளையம்மன் கோயில் தலைவர், கங்குவேலி*

*பத்மநாதன், பூசகர், நீலாப்பளையம்மன் கோயில்*

*மதிவதனன், ஆசிரியர், கங்குவேலி*

*முதல்வன், ஆசிரியர், பள்ளிக்குடியிருப்பு*